RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 166 | ஜூன்.21, 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## கனரக வாகனங்களுக்கு கட்டுப்பாடுகளை தீவிரப்படுத்த காவல் ஆணையர் உத்தரவு



சென்னை: ஜூன்.21-

தண்ணீர் லாரி மோதி பள்ளி சிறுமி உயிரிழந்ததன் எதிரொலியாக சென்னைக்குள் வரும் கனரக வாகனங்களுக்கு கட்டுப்பாடுகளை கடுமையாக்கி காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை கொளத்தூர், பொன்னியம்மன் மேடு பகுதியைச் சேர்ந்த 10 வயது சிறுமி சவுமியா, நேற்று முன்தினம் காலை தாயாருடன் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது பின்னால் வந்த தண்ணீர் லாரி மோதி பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த விவகாரத்தில் லாரி ஓட்டுநர் கைது செய்யப்பட்ட நிலையில், நேரக் கட்டுப்பாடுகளை மீறி மக்கள் அதிகளவில் சாலையை பயன்படுத்தும் பீக் ஹவர்ஸில் தண்ணீர் லாரியை அனுமதித்த குற்றச்சாட்டில் செம்பியம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் சுடலைமணி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். புளியந்தோப்பு போக்குவரத்து காவல் உதவி ஆணையர் சத்தியமூர்த்தி மீது துறை ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பள்ளி, கல்லூரிகள் அமைந்துள்ள பகுதிகளில் கனரக வாகனங்களுக்கு நேரக் கட்டுப்பாடுகளை கடுமையாக்கி காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் போக்குவரத்து போலீஸாருக்கு பிறப்பித்த உத்தரவு:

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் வரும் நேரங்களில் கனரக வாகனங்கள் செல்ல அனுமதி வழங்கக்கூடாது. பள்ளி தொடங்கும், முடியும் நேரங்களில் போக்குவரத்தை சீர்செய்யும் பணியில் போலீஸார் கட்டாயம் ஈடுபட வேண்டும். கவனக் குறைவாக செயல்பட்டு விபத்து உயிரிழப்பை ஏற்படுத்தும் வாகனங்களை 100 நாட்களுக்குள் ஒப்படைக்கக்கூடாது.

காலை 7 மணிமுதல் பகல் 12 மணி வரையும், மாலை 4 மணிமுதல் இரவு 8 மணி வரையும் பள்ளிகள் உள்ள பகுதிகளில் கனரக வாகனங்களை அனுமதிக்கும் போலீஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு காவல் ஆணையர் அருண் எச்சரித்துள்ளார்.

## போரை மாய்ப்போம், மனிதம் காப்போம் உலக அகதிகள் தினத்தில் முதல்வர் ஸ்டாலின் பதிவு




சென்னை: ஜூன்.21-

உலக அகதிகள் தினம் அனுசரிக்கப்படும் நிலையில் அகதிகள் குறித்து முதல்வர் ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "பொல்லாத போர்களின் மோசமான விளைவே நாடற்ற மனிதர்கள். மனிதத்தைக் கொல்லும் போர்களால் வாழ்விழந்து ஏதிலிகளாய் புலம்பெயர்ந்தவர்களை அன்பால் அரவணைப்போம்.

நமது திராவிடமாடலில் “அகதிகள் முகாம்” என்பதை “மறுவாழ்வு முகாம்” எனப் பெயர் மாற்றி, அன்னைத் தமிழ் உறவுகளின் மாண்பைப் போற்றினோம்! வாழ்வாதாரத்தையும் வாழ்வுரிமையையும் பாதுகாக்கிறோம். போரை மாய்ப்போம்! மனிதம் காப்போம்" எனத் தெரிவித்துள்ளார்.

## போக்குவரத்து ஊழியர் ஊதிய ஒப்பந்தத்தை செயல்படுத்துவதில் மோசடி: அரசுக்கு அன்புமணி கண்டனம்



சென்னை: ஜூன்.21-

போக்குவரத்து ஊழியர் ஊதிய ஒப்பந்தத்தை செயல்படுத்துவதில் மோசடி நடந்துள்ளது. தொழிலாளர்களின் உணர்வுகளை மதித்து அவர்களின் ஊதிய விகிதத்தை ஒப்பந்தப்படி நியாயமாகவும் நேர்மையாகவும் போக்குவரத்துக் கழகங்கள் நிர்ணயிக்க வேண்டும்; உழைப்பு மற்றும் ஊதியச் சுரண்டலைக் கைவிட வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உள்ளிட்ட பணியாளர்களுக்கு 15 ஆம் ஊதிய விகிதத்தின்படி நடப்பு மாதம் முதல் ஊதியம் வழங்கப்படவிருக்கும் நிலையில், ஊதியத்தை நிர்ணயம் செய்வதில் திட்டமிட்டு பல மோசடிகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அதனால், போக்குவரத்துத் துறை பணியாளர்களுக்கு மாதம் ரூ.1000 முதல் ரூ.3000 வரை ஊதிய இழப்பு ஏற்படும். தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் குறைந்த ஊதியத்தில் கூட சுரண்டும் போக்கு கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கான 15 ஆம் ஊதிய ஒப்பந்தம் கடந்த மே 29 கையெழுத்திடப்பட்டது. அதன்படி தொழிலாளர்களுக்கு 6 விழுக்காடு ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஊதிய ஒப்பந்தம் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் பின்தேதியிட்டு செயல்படுத்தப்படவுள்ளது என்ற போதிலும், புதிய ஊதிய ஒப்பந்தத்தின்படியான முதல் ஊதியம் நடப்பு மாத இறுதியில் தான் வழங்கப்படவுள்ளது.

அதற்கான ஊதியப் பட்டியல் தயாரிக்கப்படும் நிலையில் தான், புதிய ஊதிய ஒப்பந்தத்தின்படி தொழிலாளர்களுக்கான மாத ஊதியம் முறையாக நிர்ணயிக்கப் படவில்லை என்பது தெரியவந்திருக்கிறது. போக்குவரத்துக்கழக நிர்வாகங்களும், உயரதிகாரிகளும் இணைந்து தான் ஊழியர்களிடம் ஊதிய சுரண்டலை செய்திருக்கின்றனர் என்பது அம்பலமாகியிருக்கிறது.

தொழிலாளர்களின் ஊதியம் எவ்வாறு சுரண்டப்படுகிறது என்பதை விளக்குகிறேன். புதிய ஊதிய விகிதம் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நடைமுறைக்கு வருவதால், அந்த அடிப்படையில் கணக்கிட வேண்டும். 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஓர் தொடக்கநிலை ஊழியரின் அடிப்படை ஊதியம் ரூ.17,500 ஆகும். அவருக்கு 6% ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த தொகையான ரூ.1050 சேர்க்கப்பட வேண்டும்.

அது ரூ.1050 அல்லது அதற்கும் கூடுதலாக இருந்தால், ரூ.1100 ஆகவும், ரூ.1050ஐ விட குறைவாக இருந்தால் ரூ.1000 ஆகவும் மாற்றி முழுமையாக்கப்படும். அதனால், அந்தத் தொழிலாளியின் அடிப்படை ஊதியம் ரூ.18,600 ஆக உயரும். ஆனால், போக்குவரத்துக்கழக பணியாளர்களின் ஊதிய விகிதத்தில் ரூ.18,600 என்ற ஊதிய நிலை இல்லை. இது ரூ.18,500 என்ற ஊதிய நிலையை விட அதிகம் என்பதால், அடுத்த நிலையான ரூ.19,100 க்கு உயர்த்தப்படும். 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆண்டு ஊதிய உயர்வாக 3%, அதாவது ரூ.600 சேர்க்கப்பட்டு, அவரது அடிப்படை ஊதியம் ரூ.19,700 ஆக அதிகரிக்கும். அத்துடன் அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி உள்ளிட்டவை சேர்த்து அவரது மொத்த ஊதியம் நிர்ணயிக்கப்படும். அந்த ஊதியம் தான் நடப்பு மாதம் வழங்கப்படும்.

ஆனால், 6% ஊதிய உயர்வை முழுமையாக சேர்க்காத அதிகாரிகள், முதலில் 3%, அடுத்து 3% சேர்த்து ஊதிய விகிதத்தைக் கணக்கிட்டுள்ளனர். ரூ.17,500 அடிப்படை ஊதியத்துடன் முதலில் 3% சேர்க்கப்பட்டால், கூடுதலாக ரூ.525 கிடைக்கும். இது ரூ.550ஐ விட குறைவு என்பதால், அது ரூ.500 என முழுமையாக்கப்படும். அதேபோல், அடுத்த 3 விழுக்காட்டுக்கும் ரூ.500 மட்டும் சேர்க்கப்படும்.

அதனால், அந்த ஊழியரின் அடிப்படை ஊதியம் ரூ.18,500 என்ற நிலைக்கு உயர்த்தப்படும்.2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆண்டு ஊதிய உயர்வாக 3%, அதாவது ரூ.600 சேர்க்கப்பட்டு, அவரது அடிப்படை ஊதியம் ரூ.19,100 ஆக அதிகரிக்கும். இது இயல்பாக அவருக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை ஊதியமான ரூ.19,700 ஐ விட ரூ.600 குறைவு ஆகும். அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி ஆகியவற்றிலும் இது எதிரொலிக்கும் என்பதால் தொடக்க நிலை ஊழியரின் ஊதியம் அவருக்கு இயல்பாக கிடைக்க வேண்டியதை விட ரூ.1000 குறையும்.

சில ஊதிய நிலைகளுக்கான ஊதிய உயர்வு எவ்வாறு கணக்கிடப்பட்டாலும் அதில் பாதிப்பு எதுவும் ஏற்படாது. அதேநேரத்தில் மூத்த தொழிலாளர்களின் அடிப்படை ஊதிய விகிதம் இவ்வாறு கணக்கிடப்படும்போது அவர்களின் அடிப்படை ஊதியம் ரூ.2,000 வரையிலும், மொத்த ஊதியம் ரூ.3000 வரையிலும் குறையும். ஆண்டுக்கு அதிகபட்சமாக ரூ.36,000ஐ அவர்கள் இழப்பர். இது மிகப்பெரிய உழைப்புச் சுரண்டல் ஆகும். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் 1.10 லட்சம் தொழிலாளர்களில் சுமார் 30 ஆயிரம் பேர் இந்த ஊதிய மற்றும் உழைப்புச் சுரண்டலால் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

கருணாநிதி ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடன் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. ஆனால், மு.க.ஸ்டாலின் ஆட்சிக்காலத்தில் இது 4 ஆண்டுகள் என அதிகரிக்கப்பட்டதால், ஓராண்டுக்கான ஊதிய உயர்வை அவர்கள் இழந்தனர். இந்த வகையில் 30 ஆண்டுகள் பணி செய்யக்கூடிய ஒரு தொழிலாளி 10 ஆண்டுகளுக்கான ஊதிய உயர்வை இழப்பார்.

அதுமட்டுமின்றி, இப்போது கையெழுத்திடப்பட்டுள்ள 15 ஆம் ஊதிய ஒப்பந்தத்தின்படி உயர்த்தப்பட்ட ஊதியத்திற்கான நிலுவைத் தொகை 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் வழங்கப்படுவதற்கு பதிலாக 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தான் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதால், ஓராண்டுக்கான ஊதிய உயர்வு நிலுவைத் தொகையை போக்குவரத்துக்கழக ஊழியர்கள் இழப்பார்கள்.

இவ்வளவு தாக்குதல்களையும் தாங்கிக் கொண்டிருக்கும் போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்கள் மீது ஊதியச் சுரண்டல் என்ற புதியத் தாக்குதலையும் திமுக அரசு நடத்தியிருக்கிறது. மனசாட்சியும், மனித நேயமும் உள்ள எந்த அரசும் இப்படி ஒரு சுரண்டலில் ஈடுபடாது. ஆனால், திமுக அரசுக்கு அவை இரண்டும் இல்லை.

அதனால், தொழிலாளர்கள் மீது எத்தகைய தாக்குதலையும் நடத்தத் தயங்காது. இந்த சுரண்டலால் திமுகவின் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தொழிலாளர்களும் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றனர். தொழிலாளர்களின் உணர்வுகளை மதித்து அவர்களின் ஊதிய விகிதத்தை ஒப்பந்தப்படி நியாயமாகவும் நேர்மையாகவும் போக்குவரத்துக் கழகங்கள் நிர்ணயிக்க வேண்டும்; உழைப்பு மற்றும் ஊதியச் சுரண்டலைக் கைவிட வேண்டும் என வலியுறுத்துகிறேன்.” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு: முன்னாள், இந்நாள் தலைமைச் செயலாளர்கள் ஆஜராக ஐகோர்ட் உத்தரவு

சென்னை: ஜூன்.21-

கருணை அடிப்படையில் பணி வழங்குவது தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை அமல்படுத்தாதது தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், 2023 ம் ஆண்டு செப்டம்பர் முதல் இதுவரை தலைமைச் செயலாளர்களாக பதவி வகித்தவர்களை ஜூலை 21ம் தேதி நேரில் ஆஜராக சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பணியின் போது உயிரிழந்த அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பாக கால நிர்ணயம் செய்வது குறித்து ஆய்வு செய்ய குழு அமைக்க வேண்டும். கருணை அடிப்படையில் வேலை கோருவோரின் மாநில அளவிலான பட்டியலை தயாரிக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளதா என மூன்று மாதங்களில் அறிக்கை தாக்கல் செய்ய கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்நிலையில், கருணை அடிப்படையில் வேலை வழங்கக் கோரிய வழக்கு, நீதிபதி பட்டு தேவானந்த் முன்பு கடந்தமுறை விசாரணைக்கு வந்தது.

அப்போது, 2023 ம் ஆண்டு உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அப்போது வழக்கு தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்த நீதிபதி, 2023 ம் ஆண்டு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் எந்த குழுவும் அமைக்கப்படவில்லை. அறிக்கையும் தாக்கல் செய்யப்படவில்லை எனக்கூறி, 2023 ம் ஆண்டு செப்டம்பர் முதல், இதுவரை தமிழகத்தில் தலைமைச் செயலாளர்களாக பதவி வகித்தவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கை பதிவு செய்ய உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு, நீதிபதி பட்டு தேவானந்த் முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசுத்தரப்பில் , கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பாக கால நிர்ணயம் செய்வது குறித்து ஆய்வு செய்ய குழு அமைத்தல், கருணை அடிப்படையில் வேலை கோருவோரின் மாநில அளவிலான பட்டியல் தயாரித்தல் தொடர்பாக கடந்த ஜூன் 11ம் தேதி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது, என தெரிவிக்கப்பட்டது. அந்த அரசாணையின் நகலும் தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, உயர் நீதிமன்றம் தாமாக முன் வந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணைக்கு எடுத்த பின்னர் தான், குழு அமைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பிறப்பித்த உத்தரவை கடந்த ஜூன் 11ம் தேதி வரை அமல்படுத்தாதது நீதிமன்ற அவமதிப்பு செயல். நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டனை விதிக்கும் முன் சம்பந்தப்பட்டவர்கள் விளக்கம் அளிக்க அவகாசம் வழங்க வேண்டும்.

எனவே, இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பாக, 2023ம் ஆண்டு செப்டம்பர் முதல் இதுவரை தலைமைச் செயலாளர்களாக பதவி வகித்தவர்கள், ஜூலை 21ம் தேதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை அன்றைய தினத்துக்கு ஒத்திவைத்தார்.



■ சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (வேளாண்மை) (பொ) திருமதி சண்முகஜெயந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி தனலெட்சமி உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் உள்ளனர்.

## மனமகிழ் மன்றம் என்ற பெயரில் மதுபானம் விற்கிறார்கள்: உயர் நீதிமன்ற நீதிபதிகள் வேதனை

மதுரை: ஜூன்.21-

மனமகிழ் மன்றங்கள் என்ற பெயரில் மதுபான விற்பனை நடைபெறுகிறது என்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் வேதனை தெரிவித்தனர்.

விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த முத்துசாமி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: சிவகாசி அருகேயுள்ள விஸ்வநத்தம் கிராமத்தில் மனமகிழ் மன்றம் அமைக்க, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்கியுள்ளார். அந்த மனமகிழ் மன்றம் அமையவுள்ள இடம் மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் பகுதியாகும். வழிபாட்டுத் தலங்கள், பள்ளிகள், மருத்துவமனை மற்றும் வணிக வளாகங்கள் நிறைந்த பகுதியாகும். பள்ளி மற்றும் வழிபாட்டுத் தலங்களில் இருந்து 100 மீட்டருக்கு அப்பால்தான் மதுக் கடைகள் இருக்க வேண்டும். ஆனால், இங்கு தூரக்கட்டுப்பாடு விதிகளைப் பின்பற்றப்படவில்லை.

எனவே, விஸ்வநத்தம் கிராமத்தில் மனமகிழ் மன்றம் அமைக்க வழங்கிய அனுமதியை ரத்து செய்தும், அந்த இடத்தில் எதிர்காலத்தில் மனமகிழ் மன்றம் அமைக்க அனுமதி கொடுக்கக் கூடாது என்றும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம் சுப்பிரமணியம், ஏ.டி.மரிய கிளாட் அமர்வில் விசாரணைக்கு வந்தது. பின்னர் நீதிபதிகள், “மனமகிழ் மன்றங்கள் அமைக்க எதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது? இரண்டு உடைந்துபோன கேரம் பலகைகளை வைத்துக்கொண்டு, மனமகிழ் மன்றம் என்ற பெயரில் மதுபான விற்பனை நடைபெறுகிறது.

மனமகிழ் மன்றம் எந்த விதியின் அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது? பதிவு செய்யப்பட்ட மனமகிழ் மன்றங்களின் சட்ட திட்டங்கள் என்ன? அந்த மனமகிழ் மன்றங்களில் எத்தனை பேர் உறுப்பினர்களாக உள்ளனர்? அந்த உறுப்பினர்களுக்கு ஏற்ப மதுபானங்கள் விநியோகிக்கப்படுகிறதா? மனமகிழ் மன்றங்களை கலால் துறை அதிகாரிகள் முறையாக ஆய்வு செய்கிறார்களா? இதற்கு விருதுநகர் மாவட்ட ஆட்சியர், கலால் அதிகாரிகள், டாஸ்மாக் மேலாளர் ஆகியோர் பதிலளிக்க வேண்டும். விசாரணை ஒரு வாரத்துக்கு தள்ளிவைக்கப்படுகிறது” என்று உத்தரவிட்டனர்.



■ மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மா.சௌ. சங்கீதா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மைத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் விவசாய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) விவேக் யாதவ், இ.ஆ.ப., வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் கா.ராஜ்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளனர்.

# பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா மற்றும் 4ஆண்டு சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

பம்மல், ஜூன்.21-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகர பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் 4ஆண்டு சாதனைகளை விளக்கி நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டல குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி அவர்கள் ஏற்பாட்டில் 6வது வட்ட கழக செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் 6வது வட்ட மாமன்ற உறுப்பினர் கல்யாணி டில்லி வரவேற்புரையில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் அவர்கள் பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர், பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம், துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதி நிதிகள் பி.ஜே.வேந்தன், இரா.கந்தவேலு, என்.கே. ரவிச்சந்தின், சு.மனோகரன், ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலையில். குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன், தலைமைக் கழக சொற்பொழிவாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, கழக இளம் பேச்சாளர் ரிஷி சந்தோஷ் , பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர்தாம்பரம் மாநகர கழக துணை செயலாளர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர்தாம்பரம் மாநகர கழக அவைத் தலைவர் கோ.காமராஜ், பல்லவரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், காஞ்சி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் L.பிரபு, காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஏ. சத்திய பிரபு, தலைமை கழக பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ், முன்னாள் பேரூர் செயலாளர் பா.செல்வம், முன்னாள் பேரூர் செயலாளர் பி.எஸ். ரவி வட்டக் கழக செயலாளர்கள் ஏ.அனிஸ் டன், மு.இன்பசேகர், என்.காந்தி, முகமது அப்பாஸ், எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதர், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் ஏ.மதினாபேகம், ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்




இக்கூட்டத்தில் வாக்குச் சாவடி பாக பணிக்குழு உறுப்பினர்கள், மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், BLA-2,BLC, கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

இறுதியில் பம்மல் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் ரா.ராஜசேகர் ஏற்பாட்டில் மாற்று கட்சியில் இருந்து விலகி திமுகவில் இணைந்து கொண்டனர்

# ரேஷன் கடைகளில் இனி ஒருமுறை கைவிரல் ரேகை பதிவு வைத்தால் போதும்: தமிழக அரசு நடவடிக்கை

சென்னை, ஜூன்.21-

ரேஷன் கடைகளில் இனி ஒருமுறை கைவிரல் ரேகை பதிவு செய்தாலே பொருட்களை வழங்கும் வகையில் தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழகத்தில் உள்ள ரேஷன் அட்டைகளில் பொருட்கள் வினியோகம் செய்யும்போது ஒன்றிய அரசு திட்ட அரிசிக்கு ஒரு முறையும், மாநில அரசு திட்ட பொருட்களுக்கு ஒரு முறையும் என மொத்தம் 2 முறை ரேஷன் அட்டைதாரர்கள் கைவிரல் ரேகை பதிவு வைக்க வேண்டும். இதனால், பொருட்கள் வினியோகம் செய்வதில் பெருமளவில் காலவிரயம் ஏற்பட்டு வந்தது.




ரேஷன் கடைகளில் பொருட்களை வாங்குவதற்கு அட்டைதாரர்கள் அதிக நேரம் காத்திருப்பதை கருத்தில் கொண்டு கால விரயத்தை குறைக்க தமிழக அரசின் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதில் முக்கியமான ஒரு நடவடிக்கையாக முன்னுரிமை ரேஷன் அட்டைகள் (பி.எச்.எச்.) மற்றும் முன்னுரிமைக் ரேஷன் அட்டைகள் ரூ அந்தியோதயா அன்ன யோஜனா (பி.எச்.எச். ஏ.ஏ.ஒய்.) ஆகிய ரேஷன் அட்டைகளுக்கு இனி பொருட்களை வழங்க ஒரே ஒரு முறையே கைவிரல் ரேகை அல்லது கண் கருவிழி பதிவு செய்தால் போதும் என்ற வகையில் மின்னணு விற்பனை எந்திரத்தில் (pos) மாற்றம் செய்யப்பட்டு உள்ளது.

இதன் மூலம் அனைத்து பொருட்களும் குறைந்த நேரத்தில் வழங்கப்படுவதால் ரேஷன் அட்டைதாரர்கள் காத்திருக்கும் நேரம் கணிசமாக குறைந்துள்ளதாக பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். முன்பெல்லாம் முன்னுரிமை அட்டைதாரர்களுக்கு 2 முறை கைவிரல் ரேகை பதிவு செய்வதால் நேரம் விரையம் ஆகும்.

ஆனால், தற்போது அது ஒருமுறை வைத்தாலே மத்திய அரசு மற்றும் மாநில அரசு திட்ட பொருட்களை வழங்க முடியும் என்பதால் பொருட்களை எளிதாகவும், உடனடியாகவும் வழங்க முடிகிறது. இதனால் வழக்கத்தை விட சுமார் 20 முதல் 25 ரேஷன் அட்டைகளுக்கு கூடுதலாக பொருட்களை வழங்க முடிகிறது என்று ரேஷன்கடை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

# தடைகாலம் முடிந்து கடலுக்கு சென்ற நாகை மீனவர்கள் வலையில் அதிகளவில் சிக்கிய மீன்கள்

## உரிய விலை கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சி

நாகை, ஜூன்.21-

தடை காலம் முடிந்து கடலுக்கு சென்ற நாகை விசைப்படகு மீனவர்கள் இன்று காலை கரை திரும்பினர். அதிகளவில் மீன்கள் கிடைத்ததாலும், உரிய விலைக்கு மீன்கள் விற்கப்பட்டதாலும் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். மீன்களின் இனப்பெருக்கத்துக்காக தமிழகத்தில் ஏப்ரல் 14ம் தேதி முதல் ஜூன் 14ம் தேதி நள்ளிரவு வரை மீன்பிடி தடை காலம் அமல்படுத்தப்படும். அதன்படி இந்தாண்டு மீன்பிடி தடைகாலம் கடந்த 14ம் தேதி நள்ளிரவு நிறைவடைந்தது. 15ம் தேதி மீன் பிடிக்க செல்வதற்காக நாகை மாவட்ட மீனவர்கள் தயார் நிலையில் இருந்தனர். ஆனால் கடல் சீற்றம் காரணமாக மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்கு செல்லக்கூடாது என்று மீன்வளத்துறை அறிவித்ததால் மீனவர்கள் மீண்டும் வீடுகளில் முடங்கினர்.

கடலில் சீற்றம் குறைந்ததால் நாகை மாவட்டத்தை சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் கடந்த 16ம் தேதி இரவு கடலுக்கு சென்றனர். ஆழ்கடலில் மீன் பிடித்த நாகையை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விசைப்படகு மீனவர்களின் வலைகளில் வஞ்சிரம், வாவல், கனவா, பாறை, நண்டு, இறால் ஆகியவை அதிகளவில் சிக்கியது. இதையடுத்து நாகை மீன்பிடி துறைமுகத்துக்கு இன்று அதிகாலை மீனவர்கள் திரும்பினர். நாகை மீன்பிடி துறைமுகத்தில் தயாராக இருந்த வியாபாரிகள் கொடுவா, வாவல், வஞ்சிரம், கனவா, இறால், நண்டுகளை போட்டி போட்டு ஏலம் கேட்டு வாங்கி சென்றனர். இதேபோல் பொதுமக்களும் அதிகளவில் மீன்களை வாங்கி சென்றனர்.

வாவல் கிலோ ரூ.1,000, வஞ்சிரம் ரூ.1,500, பாறை ரூ.450 முதல் ரூ.500, நண்டு ரூ.600 முதல் ரூ.650, இறால் ரூ.600 முதல் ரூ.700 வரை விலை போனது. இதேபோல் கடல்விரா ரூ.650 முதல் ரூ.700 வரை, விலை மீன் ரூ.600, கொடுவா ரூ.550, சங்கரா ரூ.350, நெத்திலி ரூ.300க்கு விற்பனையானது. மீன்களுக்கு உரிய விலை கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.



■ புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், வம்பரம்பட்டி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.




■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கணிப்பாய்வுக்குழுக் கூட்டம் (DISHA) மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கணிப்பாய்வுக்குழு தலைவர்/நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் அவர்கள், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம் அவர்கள், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) வீர் பிரதாப் சிங் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

# மக்களின் ஆர்வத்தை உடனடி காசாக்கும் பேராசையில் கார்பைடு கல் மூலம் பழுக்க வைக்கப்படும் மாம்பழங்கள்?

கம்பம், ஜூன்.21-

பழ வகைகளில், மா, பலா, வாழை தமிழ் இலக்கியத்தில் முக்கனிகள் என அறியப்படுகின்றது. இதில் மாம்பழம் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் தேசியப் பழமாக உள்ளது.

தமிழகத்தில், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திண்டுக்கல், வேலூர், திருவள்ளூர், தேனி, சேலம் ஆகிய மாவட்டங்களில், அதிகளவில் மாம்பழம் விளைகிறது. இங்கு நீலம், தோத்தாபுரி (பெங்களூரா, கிளிமூக்கு), பங்கனப்பள்ளி, மல்கோவா, அல்போன்ஸா, செந்தூரா, ருமானி, சப்பட்டா, இமாம்பசந், காலப்பாடு, உட்பட சுமார் 30க்கும் மேற்பட்ட வகையான மாம்பழங்கள் விளைவிக்கப் படுகின்றன.

தமிழ் நாடு சினிமா

மாம்பழம் அனைவராலும் விரும்பி சாப்பிடப்படும் முக்கிய பழ வகையாகும். ஏப்ரல் மாத இறுதியில் மாம்பழ சீசன் தொடங்கியுள்ளதால் மாம்பழங்கள் வரத்து அதிகரிக்கத் தொடங்கி உள்ளது. அனைத்து பழக்கடைகளிலும் மாம்பழங்கள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளன.கம்பம் உழவர் சந்தையில் ரூ.30 முதல் ரூ.100 வரையும், அரசமரம்,வேலப்பர் கோவில், பகுதிகளிலும் மற்றும் கம்பத்தை சுற்றியுள்ள கே.கே.பட்டி, சுருளிப்பட்டி போன்ற ஊர்களிலும் மாம்பழங்கள் விற்பனை ஜோராக நடைபெற்று வருகிறது.

பார்வையாளர்களை சுண்டி இழுக்கும் வகை வகையான இந்த மாம்பழங்களை மக்களும் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். ஆனால் இவை இயற்கையாக பழுத்தது தானா? என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. மாம்பழங்கள் பெரும்பாலும் பறித்து 5 நாள் முதல் ஒரு வாரத்தில் பழுக்கும், அப்படி பழுத்ததை , சுவைத்தால் மட்டுமே அதனுடைய உண்மையான சுவை தெரியும். உடலுக்கும் நிறைய நன்மைகள் மற்றும் நார்ச்சத்து சென்றடையும்.

ஆனால் தற்போது கம்பம் நகரில் விற்பனையாகும் பெரும்பாலான மாம்பழங்கள் கார்ப்பைடு கற்கள் மூலம் பழுக்க வைத்து சந்தையில் விற்பனை செய்வதாக பொதுமக்கள் புகார் கூறுகின்றனர். இப்பொழுதெல்லாம் மக்களுக்கு இயற்கையாக பழுத்த பழத்தை உண்பதற்கு பொறுமை இல்லை என்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

இந்த கார்பைடு கல் வைத்தால் சுமார் ஆறு முதல் ஒன்பது மணி நேரத்தில் காய்கள் பழுத்துவிடும். இதை பொதுமக்கள் வாங்கி செல்கின்றனர். ஆனால் இந்தப்பழங்களை வாங்கி உண்ணும் மக்களின் உடல் நலத்தை பற்றி வியாபாரிகள் கவலைப்படுவதில்லை.

அனுமதிக்கப்பட்ட முறை

முன்பெல்லாம் புகை மூட்டம் போட்டு மாங்காய்களை பழுக்கவைத்தது போய், இப்போது எத்திலின் திரவத்தை மாங்காய்களில் தெளித்து அவைகளை பழுக்க வைக்கும் முறையை இந்திய உணவு பாதுகாப்பு அனுமதித்துள்ளது. அதாவது மாமரத்தில் சுரக்கும் எத்திலின் என்ற ஹார்மோன் மூலம் தான் மாம்பழங்கள் மரத்தில் இயற்கையாக பழுக்கின்றன.

எனவே, அதே எத்திலின் திரவத்தை மாங்காய்களில் தெளித்து அவைகளை செயற்கையாக பழுக்க வைக்கும் முறைதான் இது. இந்த முறைப்படி 1 லிட்டர் தண்ணீருக்கு



1 மில்லி எத்தலில் திரவத்தை கலந்து அதனை மாங்காய்கள் மீது தெளித்து, அறையில் வைத்து பூட்டி வைக்கப்படும்.

அதில் இருந்து எத்தலின் வாயு வெளியேறி மாம்பழங்களை இயற்கையான முறையில் பழுக்க வைத்துவிடும். (புகை மூட்டம் போட்டு பழுக்கவைப்பது போன்று) ஆனால், இந்த முறையில் மாம்பழங்கள் பழுக்க மூன்று நாட்கள் வரை ஆகும்.

இந்த முறையில் மாங்காய்களின் நிறம் மாறுவதுடன், சுவையும் அப்படியே இருக்கும். உடல் நலத்திற்கு எந்த தீங்கையும் விளைவிக்காது. இவ்வாறு பழுக்கவைக்க மூன்று முதல் நான்கு நாட்கள் வரை ஆகும் என்பதால், வியாபாரிகள் இதை பின்பற்றுவதில்லை.

கார்பைடு கல் மூலம் பழுக்க வைக்கும் முறை

வெல்டிங் தொழிற் சாலைகளில் பயன்படுத்தப்படும் கால்சியம் கார்பைடு கல்லை சிறு துண்டுகளாக உடைத்து காகிதத்திலோ, பிளாஸ்டிக் பையிலோ சுற்றி மாங்காய்களுக்கு நடுவே வைத்துவிடுவார்கள். இந்த கால்சியம் கார்பைடில் இருந்து அசட்டலின் என்ற வாயு வெளியாகி மாம்பழத்தை பழுக்க வைக்கிறது. மாம்பழத்தின் நிறத்தை அது மாற்றும். தன்மையை கெடுத்துவிடும்.

அடுத்த ஆறு மணி நேரத்தில் மாங்காய்கள் அனைத்தும் பழுத்து மஞ்சள் நிறமாக மாறிவிடும். இதுதான் செயற்கை கல் மூலம் பழுக்க வைக்கும் முறை. இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தின் படி இது தடை செய்யப்பட்ட முறையாகும். இப்படி பழுக்க வைத்த பழங்களை அவ்வப்போது உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து அழிப்பதும் உண்டு.

எப்படி கண்டுபிடிப்பது?

கால்சியம் கார்பைடு கல் வைத்து பழுக்க வைக்கப்படும் மாம்பழங்கள் கண்ணை சுண்டியிழுக்கும் வகையில் இருந்தாலும் சுவை இருக்காது. பழத்தில் இனிப்பு இருக்காது. இந்த மாம்பழத்தை சாப்பிட்டால் வயிற்று வலி உண்டாகும். தொடர்ந்து வாந்தி, மயக்கம், வயிற்றுப்புண் போன்றவை ஏற்படும்.

வேதியியல் மாற்றங்களால் புற்றுநோய் ஏற்படும் அபாயமும் உள்ளது என்கின்றனர் உணவு பாதுகாப்பு அதிகாரிகள். கார்பைடு கல் மூலம் பழுக்க வைத்த மாம்பழங்களை மக்கள் எளிதில் கண்டுபிடித்துவிடலாம். மாம்பழத்தின் மணம் இருக்காது. மாம்பழங்களின் மீது கறுப்பு புள்ளிகள் இருக்கும்.

மாம்பழங்களை தொட்டு பார்த்தால் சூடாக இருக்கும். தோல் மட்டும் பழுத்தது போல மஞ்சளாக இருக்கும். உள்ளே வெட்டி பார்த்தால் பழுத்திருக்காது, சுவையும் இருக்காது. மேலும் ஒருசில நாட்களில் கெட்டு போய்விடும். கல்வைத்து பழுக்கவைத்த பழம் தண்ணீரில் மிதக்கும்.

இயற்கையாக பழுத்த பழங்களில் கடைசியாகத்தான் காம்புப்பகுதி பழுக்கும். கல்வைத்து பழுத்த பழம் முழுவதும் மஞ்சள் நிறமாக இருக்கும். இதன் மூலம் இயற்கையாக பழுத்த பழங்களையும் கார்பைடு கல்வைத்த பழங்களையும் எளிதில் கண்டுபிடித்துவிடலாம்.

இதுகுறித்து வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ''வைட்டமின் 'ஏ' மற்றும் 'சி' சத்து நிறைந்த மா, பழ வகைகளின் ராணி என்று அழைக்கப்படுகிறது. இயற்கையாக பழுத்த மாம்பழம் உடல் நலத்திற்கு கேடு விளைவிப்பதில்லை. 'கார்பைடு கல்' வைத்த மாம்பழம் சாப்பிட்டால் வயிற்று வலி, வாந்தி, வயிற்றுப்புண் ஏற்படும்.

அதனால் பொதுமக்களும் கல்வைத்த மாம்பழத்தை கண்டு வாங்காமல் ஒதுக்கிவிட வேண்டும். மேலும், மக்களின் உடல் நலத்தை பற்றி கவலைப்படாமல், கார்பைடு கல் மூலம் மாங்காய்களை பழுக்கவைத்து விற்பனை செய்து பணம் சம்பாதிப்பவர்கள் மீது, உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய அலுவலர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்''என்றார்.

தமிழகத்தின் பங்களிப்பு 4.5 சதவீதம்

உலகிலேயே அதிக அளவு மாம்பழம் உற்பத்தி செய்யும் நாடு இந்தியா. நாட்டின் மொத்த மா சாகுபடி பரப்பளவில், தமிழகத்தின் பங்களிப்பு 4.5 சதவீதம் என்றளவில் உள்ளது. தட்பவெப்ப மாறுதல்களைத் தாங்கி வளரக் கூடிய மாம்பழம், பழச்சாறு, ஊறுகாய் போன்ற பல வகை உணவுப் பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது.

தமிழ்நாட்டில் சுமார் 3 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கரில் மாம்பழம் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் கிருஷ்ணகிரி மாவட்டம் முதல் இடத்தை பிடிக்கிறது. தமிழகத்தில் உள்ள தோட்டக்கலைப் பண்ணைகளில் சுமார் 42 வகையான மாம்பழக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன.



# அணைக்கட்டு, பள்ளிகொண்டாவில் ரூ. 2.63 கோடி மதிப்பீட்டில் வாழ்வாதாரப் பூங்கா கட்டுமான பணி ஆய்வு

வேலூர், ஜூன்.21-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, பள்ளிகொண்டாவில் ஒருங்கிணைந்த நிதி வருவாய் திட்டத்தின்கீழ் ரூ.2.63 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்கா கட்டுமான பணிகளை ஊரக வளர்ச்சித் துறை ஆணையாளர் ப.பொன்னையா (20.06.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் அருள்ஜோதி அரசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூ. காஞ்சனா, மகளிர் திட்ட இயக்குநர் உ. நாகராஜன், உதவி இயக்குநர் (ஊராட் சிகள்) திருமால், செயற்பொறியாளர் அருண், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



# அணைக்கட்டில் ரூ.40.31 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சாலை பணிகள் ஆய்வு

வேலூர், ஜூன்.21-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, வல்லண்டராமம் ஊராட்சியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூபாய் 40.31 இலட்சம் மதிப்பில் கலாசிப்பட்டி முதல் பட்சிகான்பட்டி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள சாலை மேம்பாட்டுப் பணிகளை ஊரக வளர்ச்சித் துறை ஆணையாளர் பொன்னையா, (20.06.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் அருள்ஜோதி அரசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, மகளிர் திட்ட இயக்குநர் நாகராஜன், உதவி இயக்குநர் திருமால், செயற் பொறியாளர் அருண், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# ஆர்.எஸ்.மங்கலம் அருகே கொளுத்தும் கோடை வெயில் உப்பு உற்பத்தி அமோகம்

ஆர்.எஸ்.மங்கலம், ஜூன்.21-

ஆர்.எஸ்.மங்கலம் அருகே திருப்பாலைக்குடி சம்பை மற்றும் உப்பூர் பகுதியில் கொளுத்தும் கோடை வெயிலால் உப்பு உற்பத்தி அமோகமாக நடைபெற்று வருகிறது. பாத்திகளில் விளைந்துள்ள உப்புகளை சேகரிப்பு செய்யும் பணியில் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஆர்.எஸ்.மங்கலம் தாலுகாவிற்கு உட்பட்ட திருப்பாலைக்குடி சம்பை, உப்பூர் பகுதிகளில் உள்ள உப்பளங்களில் உப்பு விளைச்சல் கோடை வெயிலால் அமோகமாக நடைபெறுகிறது. பாத்திகளில் விளைந்த உப்புக்களை உப்பளத் தொழிலாளர்கள் தீவிரமாக சேகரிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு விளைவிக்கக் கூடிய உப்பு பல்வேறு பகுதிகளுக்கு செல்கின்றன.

குறிப்பாக மீன் பதப்படுத்துதல் போன்றவற்றிற்கு அதிகமாக வாங்குகின்றனர். கடந்த ஆண்டு விவசாயம் பொய்த்துப் போய்விட்டது. இதனால் இப்பகுதியில் உள்ள விவசாய கூலித் தொழிலாளர்கள் உப்பு சேகரிப்பு பணியில் சேர்ந்து வருவாயை ஈட்டி வருகின்றனர்.

உப்பள உரிமையாளர்களுக்கு உப்பு விளைச்சல் அதிகம் இருந்தும், உரிய விலை கிடைக்கவில்லை என புலம்புகின்றனர். இருந்த போதிலும் ஏதோ இத்தொழில் மூலமாக 10 பேருக்கு வேலை கொடுக்கின்றோம் என்ற மனத்திருப்தி தானே தவிர, தற்சமயம் உள்ள விலைவாசியால் பெரிதாக லாபம் ஒன்றும் இல்லை என்றனர். உப்பளங்களில் விளையக்கூடிய உப்புகளை அரசே நல்ல விலை கொடுத்து கொள்முதல் செய்தால் பயனடைவோம் என உப்பள உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாமை துவக்கி வைத்தார்



திருப்பூர், ஜூன்.21-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா அவர்கள் தலைமையில், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ .பிரகாஷ் அவர்கள் முன்னிலையில், திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், பழையகோட்டை ஊராட்சி, வேட்டைகாரன்புதூரில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாமை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். . திருப்பூர் மாவட்டத்தில் 2025-2026 ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் ஒரு ஊராட்சிக்கு 12 முகாம்கள் வீதம் 13 ஊராட்சி ஒன்றியங்களில் 156 முகாம்கள் நடைபெறவுள்ளது. அந்த வகையில் இன்றைய தினம் பழையகோட்டை ஊராட்சி, வேட்டைகாரன்புதூரில் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாமை துவக்கி வைக்கப்பட்டுள்ளது

இதுபோன்று முகாம்கள் மூலமாக ஆங்காங்கே கால்நடைகளுக்கு பல்வேறு சிகிச்சைகள் அளிப்பதும், கால்நடை வளர்ப்பவர்களுக்கு பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வரவேற்கத்தக்க ஒன்று. குறிப்பாக, மனிதர்களுக்கு உடல்நலம் சரி இல்லாமல் இருந்தால் வாகனங்கள் மூலமாக மருத்துவமனைக்கு எளிதாக சென்றுவிடலாம். ஆனால் கால்நடைகளை அழைத்துச் செல்வதற்கு சிரமம் ஏற்படும். எனவே இது போன்ற முகாம்கள் மற்றும் ஆங்காங்கே உள்ள துணை சுகாதார நிலையங்களையும், கால்நடை மருந்தகங்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் முகாமில் கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் குடற்புழு நீக்கம் செய்தல், ஆண்மை நீக்கம் செய்தல், நோய்களுக்கு எதிரான தடுப்பூசி போடுதல், செயற்கை முறை கருவூட்டம் செய்தல், சினை பரிசோதனை செய்தல், சிறு அறுவை சிகிச்சைகள், தாது உப்பு கலவை வழங்குதல் போன்ற சிகிச்சைகளும் வழங்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குகின்றார்கள் ஆலோசனைகளை பின்பற்றி கால்நடைகளை பாதுகாத்துக்கொள்ளலாம். கால்நடை செல்வம் விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய ஒன்று.

போக்குவரத்து வாகனங்கள் இல்லாத காலத்தில் ஒரு இருடத்தில் இருந்து ஒரு இடத்திற்கு செல்லக்கூடிய சூழ்நிலை இருந்தபோது கால்நடைகளை பயன்படுத்தினோம். தற்போ தைய காலத்திலும் இன்னும் சில பேர் கால்நடைகளை பயன்படுத்துவது மகிழ்ச்சிகுரிய ஒன்றாகும். அதே நேரத்தில் கால்நடைகள் விவசாய பயன்பாட்டிற்கும் பயன்படுகிறது. அதனால் தான் தை மாதம் முதல்நாள் தமிழர் திருநாளாகவும் இரண்டாவது நாள் உழவர் தினமாக கொண்டாடி கால்நடைகளுக்கு மரியாதை செய்து வருகிறோம். மேலும், வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்வது போல் கட்டுதரையையும் சுத்தமாக இருந்தால் தான் நோய்கள் தாக்காமல் இருக்கும். குறிப்பாக கால்நடைகளை பாதுகாத்து உழவுத்தொழிலையும், கால்நடை வளர்ப்பு மூலமாக பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

காங்கேயம் தாலுகா கால்நடை மருத்துவமனை கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் ஆகியோரிடம் கோரிக்கை வைத்தோம். மருத்துவமனை கட்டுவதற்கு சுமார் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், புதிய கிளை நிலையங்கள் அமைவதற்கான கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளது. உரிய காலத்தில் கோரிக்கை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்நேரத்தில் தெரியபடுத்தி கொள்கிறேன். இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடர்ந்து, விவசாயிகளுக்கு சிறந்த கன்று வளர்ப்புக்கான பரிசுகளையும், சிறந்த மேலாண்மைக்கான பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களையும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு.புகழேந்தி, உதவி இயக்குநர்கள் மரு.பகலவன் (காங்கேயம்), மரு.வெங்கடாச்சலம் (தாராபுரம்), காங்கேயம் வட்டாட்சியர் மோகனண், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.





# கே.வி.குப்பம் தாலுகாவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி திறப்பு விழா

வேலூர், ஜூன்.21-

வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் தாலுகா, கே வி குப்பம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தமிழக முதல்வர் ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள், ஜெகன் மூர்த்தி, நந்தகுமார், கார்த்திகேயன், அமுலு, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மண்டல கல்லூரி கல்வி இயக்குநர் (தருமபுரி) முனைவர் ப.சிந்தியா செல்வி, கீ.வ.குப்பம் ஒன்றிய குழு தலைவர் ரவிசந்திரன், ஒன்றியக்குழு துணை தலைவர் பாரதி வெங்கடேசன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் சீதாராமன், ஜெயா முருகேசன், விஜயலட்சுமி முருகன். மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் அசோக்குமார், கீ.வ.குப்பம் கல்லூரி முதல்வர் முனைவர் பி.பிரபுகாந்தன், கீ.வ.குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் புஷ்பலதா சரவணன், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தில் வளர்ச்சி திட்டப்பணிகள்; கலெக்டர் ஆய்வு

குன்னூர், ஜூன்.21-

குன்னூரில், உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ், பல்வேறு துறைகளின் சார்பில், வளர்ச்சி திட்டப்பணிகளை ஆய்வு மேற்கொண்டு, 16 பயனாளிகளுக்கு ரூ.1.52 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்.

நீலகிரி மாவட்டம், குன்னூரில், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பல்வேறு துறைகளின் சார்பில், வளர்ச்சி திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு, குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டத்தில் 16 பயனாளிகளுக்கு ரூ.1.52 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முதலாவதாக, மாவட்ட கலெக்டர் கேத்தி பேரூராட்சிக்கு உட்பட்ட எல்லநள்ளி அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் எடை, உயரம் மற்றும் கற்றல் திறன், உணவுப்பொருட்களின் இருப்பு குறித்தும், எல்லநள்ளி கிளை நூலகத்தில் தினசரி வரும் வாசகர்களின் எண்ணிக்கை தொடர்பான பதிவேடுகளையும், எல்லநள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவிகளின் கற்றல் திறனை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், உபதலை ஊராட்சி மன்ற அலுவலகத்தில், பராமரிக்கப்படும் குடிநீர் வரி பதிவேடு, சொத்து வரி பதிவேடுகளை ஆய்வு செய்து, வரிப்பணம் செலுத்தாவர்களிடம் உடனடியாக வசூல் செய்யுமாறு சம்மந்தப்பட்ட அலுவலரிடம் அறிவுறுத்தி, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில், பராமரிக்கப்படும் பதிவேடுகளையும் கலெக்டர் பார்வையிட்டார்.



குன்னூர் ஊராட்சி ஒன்றியம், உபதலை ஊராட்சியில் 14வது நிதிக்குழு மானியம் 2023 2024 பாறைக்குழியில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்தில் ஷட்டர் அமைத்து அங்குள்ள இயந்திரங்கள் வைப்பதற்கு ரூ.2 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மேடையினையும், ஓட்டுப்பட்டறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், அடிப்படை வசதிகள், பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரங்கள், மருந்துகளின் இருப்பு, பரிந்துரை செய்யப்பட்ட கர்ப்பிணிகள் பதிவேடு பராமரிப்பு ஆகியவற்றினை பார்வையிட்டு, ரூ.1.30 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடப்பணிகளையும் கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து, குன்னூர் சகாயமாதா முதியோர் இல்லத்தை நேரில் ஆய்வு செய்து முதியோர்கள் எண்ணிக்கை மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து கலெக்டர் கேட்டறிந்தார்.

குன்னூர் மகளிர் காவல் நிலையத்தில் உள்ள வழக்குகளின் பதிவேடுகள் மற்றும் பொதுமக்கள் அளித்த புகார்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் நேரில் பார்வையிட்டும், குன்னூர் காந்திபுரம் இந்திரா நகர் பகுதியில் நடைபாதை அமைக்க நிலம் அளவீடு செய்யுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் கலெக்டர் அறிவுறுத்தினார்.

பின்னர் குன்னூர் காந்திபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் அங்கன்வாடி மையத்தை பார்வையிட்டார். குன்னூர் காந்திபுரம் இந்திரா நகர் பகுதியில் நடைபாதை அமைக்க நிலம் அளவீடு செய்யுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் அறிவுறுத்தினார். பின்னர் குன்னூர் காந்திபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் அங்கன்வாடி மையத்தை கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, 10 பயனாளிக்கு ரூ.50 ஆயிரம் மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளையும், 6 பயனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்து 500 இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை பெறுவதற்கான ஆணையையும் என மொத்தம் ரூ.1 லட்சத்து 52 ஆயிரத்து 500 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்.

பின்னர் குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டத்தில், உபதலை ஊராட்சியை சேர்ந்த துர்கேஷ் என்பவர் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட உறுப்பினர் அட்டை வேண்டி மனு அளித்ததையொட்டி, அம்மனுவின் மீது உடனடி நடவடிக்கை எடுக்குமாறு துறை அலுவலரிடம் உத்தரவிட்டார்.

பின்னர் குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் அரசு துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. பின்னர் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, துறை சார்ந்த அலுவலர்களிடம் வழங்கி, அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின் போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, சமூக பாதுகாப்பு திட்டம் ராதாகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணா தேவி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பிரம்ம வித்யா நாயகி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் நந்தகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் குப்புராஜ், குன்னூர் நகராட்சி ஆணையாளர் இளம்பரிதி, குன்னூர் வட்டாட்சியர் ஜவஹர், வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெய்சங்கர் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# வேலூரில் திறக்கப்பட உள்ள அரசு மருத்துவமனையை தமிழ்நாடு மின்சார வாரிய தலைவர் ஆய்வு

வேலூர், ஜூன்.21-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் பழைய அரசு மருத்துவமனை இடத்தில் கட்டப்பட்டுள்ள வேலூர் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/ அரசு கூடுதல் தலைமை செயலாளர் டாக்டர் இராதாகிருஷ்ணன், மருத்துவமனையில் நடைபெற்று வரும் மின்துறை சார்ந்த பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, மின்வாரிய தலைமை பொறியாளர் நளினி, கண்காணிப்பு பொறியாளர் பரிமளா, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுடலைமுத்து, அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.







# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.27.12 திட்டப்பணிகளை திறந்து வைத்தார்

திருப்பூர், ஜூன்.21-

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் ரூ.27.12 இலட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் முடிவுற்ற திட்டப்பணிகளை

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ. மலர்விழி தலைமையில், மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் கடந்த 18 ஆம் தேதி திறந்து வைத்தார். தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப்பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அவர்களின் நல்லாட்சியுடன் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் பல்வேறு திட்டப்பணிகளை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப் பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, 1,50,000 விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், உழவரைத்தேடி வேளாண்மை - உழவர் நலத்துறை உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.

,அந்த வகையில் திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் ஈட்டிவீரம்பாளையம் ஊராட்சி, அப்பியபாளையம் பகுதி மற்றும் வள்ளிபுரம் ஊராட்சி, அவரபாளையம் பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.27.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நியாய விலைக்கடையினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வேலுச்சாமி, அனார்களி, உதவி பொறியாளர் மகேஸ்வரி மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

# போடி பரமசிவன் கோவில் தார் சாலை அமைக்கும் பணி துவக்கம்



தேனி, ஜூன்.21-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பரமசிவன் கோவில் தார் சாலை அமைப்பதற்கு உறுதுணையாக இருந்த அதற்கான நிதியினை பெற்றுத் தந்த மேலும் தார் சாலை பணியை துவக்கி வைக்க புரிந்த திமுக வடக்கு மாவட்ட செயலாளர் மற்றும் தேனி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு போடி நகர மாணவரணி அமைப்பாளர் முத்துப்பாண்டி பொன்னாடை போற்றி வரவேற்றார்.



■ சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ், உயர்கல்விக்கான வழிகாட்டும் மாணவர் குறைதீர் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்.இ.ஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் (பொ) மாரிமுத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துக்கழுவன், துணை ஆட்சியர்கள், கல்வித்துறை அலுவலர்கள், வட்டாட்சியர்கள், ஐடிஐ, பாலிடெக்னிக், கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்கள், மாவட்ட அளவிலான உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்கள், உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள், பல்வேறு துறை உயர் அலுவலர்கள் மற்றும் மாணவர்கள்,மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் உள்ளனர்.



# இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உலக குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு இரத்ததானம் குறித்த விழிப்புணர்வு பேரணி

இராமநாதபுரம், ஜூன்.21-

இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உலக குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு இரத்ததானம் குறித்த விழிப்புணர்வு பேரணி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர்சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையேற்று உலக குருதி கொடையாளர் தினத்தையொட்டி, இரத்ததானம் செய்த நபர்களுக்கு பாராட்டுச்சான்று மற்றும் நினைவு பரிசு வழங்கி பாராட்டியதுடன், பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையிலும் இரத்ததானம் குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் கொடியசைத்து துவக்கி வைத்து பேரணியில் பங்கேற்றனர். இப்பேரணியில் 100க்கும் மேற்பட்ட செவிலியர் கல்லூரி மாணவிகள் பங்கேற்று இரத்த தானம் குறித்த விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி பொதுமக்கள் பார்த்து தெரிந்து கொள்ளும் வகையில் நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வந்தடைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அமுதாராணி, கண்காணிப்பு மருத்துவ அலுவலர் மரு.ஜவகர், மருத்துவ அலுவலர்கள் மரு.மனோஜ்குமார் அவர்கள், மரு.சிவகுமார் அவர்கள், மரு.கண்ணகி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# தெய்வத் வி. பூ. மாணிக்கவாசகம், கோ. கமலக்கண்ணன் மற்றும் அனைத்து முன்னோர்களின் நினைவை போற்றி அமைக்கப்பட்ட நீர், மோர், பந்தல்

தாம்பரம், ஜூன்.21-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஸ்ரீ சங்கரா குளோபல் அகாடமி, கிழக்கு தாம்பரம், மேல்நிலை பள்ளி அருகில் தெய்வத் வி. பூ. மாணிக்கவாசகம், தெய்வத்கோ. கமலக்கண்ணன் மற்றும் அனைத்து முன்னோர்களின் நினைவை போற்றி அமைக்கப்பட்ட நீர், மோர், பந்தல் கடந்த மூன்று மாதங்களாக பொது மக்களின் தாகத்தை தணிக்க நீர், மோர், வழங்கப்பட்டு வருகிறது. உடன் சக்தி மற்றும் அவரது நண்பர்கள் இணைந்து சேவை செய்வதை பொதுமக்கள் வெகுவாக பாராட்டி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விடுதிகளில் தங்கி பயில, வருகின்ற 30.06.2025 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தகவல்



சிவகங்கை, ஜூன்.21-

சிவகங்கை மாவட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்து விடுதிகளிலும் தங்கி பயில ஆர்வமுள்ள, பள்ளி / ஐடிஐ/ டிப்ளமோ/ கல்லூரியில் புதியதாக சேரும் மாணவர் மற்றும் மாணவியர்கள் வருகின்ற 30.06.2025 ஆம் தேதிக்குள் https://nallosai.tn.gov.in/ என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

எனவே, பள்ளி / ஐடிஐ/ டிப்ளமோ/ கல்லூரியில் புதியதாக சேரும் மாணவ / மாணவியர்கள் குறிப்பிட்டுள்ள இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து, அரசின் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



■ சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ், உயர்கல்விக்கான வழிகாட்டும் மாணவர் குறைதீர் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்,இ.ஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



# வேலூரில் தூய்மை பணியாளர்கள் கியூ ஆர் கோடு மூலம் குப்பைகள் சேகரிக்கும் பணி

வேலூர், ஜூன்.21-

வேலூர் வட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் வேலூர் மாநகராட்சி, சத்துவாச்சாரி பகுதியில் திடக்கழிவு மேலாண்மையின் ஒரு பகுதியாக தூய்மை பணியாளர்கள், வீடுகளுக்கு வந்து குப்பைகள் சேகரிக்கும் பணியை QR Code மூலம் உறுதி செய்யும் பணியினை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வேலூர் வட்டாட்சியர் வடிவேல், மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் சிவகுமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தார்.



# முடிச்சூர் ஊராட்சியில் அதிமுக சார்பில் மதனபுரம் பல்லவன் நகர் பகுதியில் வீடு வீடாக சென்று துண்டு பிரசுரங்களை வழங்கிய மாவட்ட கழக செயலாளர் சிட்லப்பாக்கம் ச.ராஜேந்திரன்

முடிச்சூர், ஜூன்.21-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பரங்கிமலை மேற்கு ஒன்றிய முடிச்சூர் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அதிமுக சார்பில் வீடு வீடாக சென்று துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சி பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.பி.மனோகரன் தலைமையில் முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன், பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.பி.மனோகரன், மறை மலைநகர் நகராட்சியின் முன்னாள் நகரமன்ற தலைவரும் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக அம்மா பேரவை கழகச் செயலாளர் எம்.ஜி.கே.கோபி கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு வீடு வீடாக சென்று திமுக அரசின் அவலங்களை எடுத்துக் கூறி பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் பொழிச்சலூர் பகுதி கழக செயலாளர் பாபு, மதனபுரம் பாக செயலாளர் செந்தில்குமார், கார்த்திக் பல்லவன் நகர் செயலாளர் ராஜா, மகளிர் அணி நிர்வாகிகள் லலிதா, கற்பகம் சீனிவாசன், ஜோதிஸ்வரி, சரளா, எஸ்.கலா, விஜயதாரணி, தேவிகா, கமலா, நிர்மலா, அன்பரசி, சுகன்யா, சௌமியா மற்றும் முடிச்சூர் ஊராட்சி கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு வீடு வீடாக சென்று துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161